بسم الله الرحمن الرحيم

# கேள்வி : 66

# துல்ஹஜ் பிறை 11,12 & 13 ஆகிய (அய்யாமுத் தஷ்ரீகுடைய) நாட்களில் "உள்ஹிய்யா" கொடுக்கலாமா? விளக்கவும்

## பதில்:

**இது சம்பந்தமாக அறிஞர்களிடையே நான்கு வகையான கருத்துக்கள் இருக்கின்றன.**

ஒன்று : அய்யாமுத் தஷ்ரீகுடைய நாட்கள் அனைத்தும் அறுத்துப் பலியிடுவதற்குரிய நாட்கள்தான் என்பது, இக்கருத்தில் இமாம் ஹஸனுல் பஸ்ரி, இமாம் அதாவு இப்னு அபீ ரபாஹ், இமாம் அல்அவ்சாயி,இமாம் ஷாபிஈ, இமாம் இப்னு தைமிய்யா (ரஹீமஹுமுல்லாஹ்) போன்ற பெரும் அறிஞர்களும், அறிஞர்களில் அதிகமானோரும் இக்கருத்தில் தான் இருக்கின்றனர்.

இரண்டாவது: ஈதுடைய நாளும், அதற்கு அடுத்துள்ள இரண்டு நாட்களுமாகும் என்ற கருத்தாகும். இக்கருத்தில் , இமாம் அபூஹனீபா, இமாம் மாலிக், இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல்(ரஹீமஹுமுல்லாஹ்) ஆகியோர் இருக்கின்றனர்.

மூன்றாவது : ஹஜ்ஜில் இருப்பவருக்களுக்கு மூன்று நாட்களும், ஹஜ்ஜில் இல்லாதவர்களுக்கு 10வது நாள் மட்டுமாகும். ஹஜ்ஜில் இருப்பவர்களுக்கு 10வது நாள் அன்று செய்யவேண்டிய கடமைகள் அதிகமாக இருப்பதினால் அதாவது, கல்லெறிதல், மொட்டையடித்தல், தவாப் செய்தல் என நிறைய அமல்கள் இருப்பதால், அன்றைய தினமே அறுத்தல் என்பது எல்லோருக்கும் சாத்தியமற்றதாக இருப்பதால், அதற்கு அடுத்த (அய்யாமுத் தஷ்ரீக்)நாட்களிலும் அறுத்துப் பலியிடலாம் என்பது இமாம் ஸயீத் இப்னு ஜுபைர்(ரஹ்), இமாம் ஜாபிர் இப்னு ஸைத்(ரஹ்) ஆகியோர்களின் கருத்தாகும்.

நான்காவது: அறுத்துப் பலியிடுதல் என்பது 10 வது நாளாகிய யௌமுன் நஹ்ர் மட்டுதான். ஏனெனில், அறுத்துப் பலியிடுதல் என்ற செயலோடு அந்த நாள் மட்டும் தான் குறிக்கப்பட்டிருக்கின்றது, இன்னும் அறுத்துப் பலியிடுதல் ஈதுல் அல்ஹா பெருநாளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது. ஹஜ்ஜோடு சம்பந்தப்பட்ட நாட்கள் பன்மையிலும், அறுத்துப் பலியிடும்

**நாள் ஒருமையில் சொல்லப்பட்டிருக்கின்றது,உதாரணத்திற்கு, அய்யாமுர் றமி (கல்லெறியும் நாட்கள்) அய்யாமுல் முனா(மினாவில் தங்கியிருக்கும் நாட்கள்) அய்யாமுத் தஷ்ரீக்(தஷ்ரீக்குடைய நாட்கள்) என்று பன்மையாக ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன, ஆனால் யௌமுன் நஹ்ர் (அறுத்துப் பலியிடும் நாள்) என்று இந்த நாள் ஒருமையில் கூறப்பட்டிருப்பதால், 10 வது நாளாகிய யௌமுன் நஹ்றில் மட்டும் தான் அறுத்துப்பலியிட வேண்டும், அடுத்த நாட்களில் கொடுத்தால் அது உள்ஹியாவாக ஆகாது என்று இமாம் இப்னு ஸீரீன்(ரஹ்)அவர்கள் மட்டும் குறிப்பிட்டுள்ளார்கள்.**

இவ்வாறு நான்கு கருத்துக்கள் இருந்தாலும், இதை இரண்டு கருத்துக்களாக சுருக்கிடலாம். அதாவது, யௌமுன் நஹ்ர் அல்லாத அய்யாமுத் தஷ்ரீக்கில் உள்ஹிய்யா கொடுத்தால் அது உள்ஹிய்யாவாக ஆகுமா? ஆகாதா? என்பதுதான். கூடும் என்பது அதிகமான அறிஞர்களின் கருத்து, கூடாது என்பது ஒரே ஒரு அறிஞரின் கருத்து, இந்த இரண்டு கருத்தில் எது சரி என்பதைத் தான் காணவிருக்கின்றோம்.

முதலாவதாக அய்யாமுத் தஷ்ரீகுடைய நாட்களில்(துல்ஹஜ் பிறை 11,12&13) உள்ஹிய்யா கொடுத்தால் அது உள்ஹிய்யாவாக ஆகாது என்று கூறுபவர்கள் எடுத்து வைக்கும் காரணங்களைக் காண்போம்.

## முதல் காரணம்:

குர்பானியின் முன்னோடி இப்ராஹீம்(அலை)அவர்கள்தான், இப்ராஹீம்(அலை)அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி தனது மகன் இஸ்மாயீல்(அலை)அவர்களை அறுத்துப் பலியிட முன்வந்தார்கள், அதன்படி அறுக்க முற்படும்போது, அல்லாஹ் அவர்களின் தியாகத்தை ஒப்புக்கொண்டு, இஸ்மாயீல்(அலை)அவர்களுக்குப் பதிலாக அல்லாஹ் ஒரு பலிப்பிராணியை கொடுத்து அறுக்கும்படி கட்டளையிட்டான். அதை அறுத்துப் பலியிட்டார்கள். இதுதான் உள்ஹிய்யாவின் பின்னணி. இப்ராஹீம்(அலை)அவர்கள் குர்பானி கொடுத்தது ஒருநாள் கொடுத்தார்களா? நான்கு நாட்கள் கொடுத்திருப்பார்களா? நிச்சயமாக ஒரு நாளில் தான் குர்பானி கொடுத்திருக்க முடியும். எனவே, குர்பானி கொடுக்கும் நாள் இப்ராஹீம்(அலை)அவர்கள் குர்பானி கொடுத்த அந்த ஒருநாள் தான், நான்கு நாட்கள் அல்ல என்பது அவர்களின் வாதம்.

## காரணத்திற்காக பதில் :

மார்க்கத்தில் ஒருசில வணக்கங்கள் இருக்கின்றன, செய்வதற்கு அவைகளைச் செய்வதற்கான ஆரம்ப நேரத்தைக் குறிக்கும் இஸ்லாம், அதை செய்வதற்கான கால அவகாசத்தையும் வழங்கியிருக்கும். அந்த அவகாசத்திற்குள் அதை நிறைவேற்றிவிடவேண்டும். அவ்வாறு நிறைவேற்றினால் அதை முழுமையாக நிறைவேற்றியதாகவே கருதப்படும்.

உதாரணத்திற்கு,

عن أبي أيوب الأنصاري رضي الله عنه أن رسول الله صلى الله عليه وسلم قال: "من صام رمضان ثم أتبعه ستاً من شوال فكأنما صام الدهر كله. رواه مسلم.

**"எவர் ரமளானில் நோன்புநோற்று பின் ஷாவ்வாளில் ஆறு நோன்புகளை பின்தொடர்ச் செய்கின்றாரோ, அவர் காலமெல்லாம் நோன்பு நோற்றவரைப் போன்றவராவார் என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அபூஅய்யூப் அல்அன்ஸாரி(ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நூல்: முஸ்லிம்)**

இந்த ஹதீஸின் நேரடி கருத்து ரமளான் முடிந்தவுடன் அதைத்தொடர்ந்து வரும் ஆறு நாட்களில் நோன்புவைக்கவேண்டும் அவ்வாறு நோன்பு நோற்பவருக்குத்தான் காலமெல்லாம் நோன்பு நோற்ற கூலி கிடைக்கும் என்ற கருத்தை கொடுப்பதாக இருக்கிறது.

ஒருவர், இந்த ஆறு நோன்புகளை ஷவ்வால் மாதத்தின் நடுப்பகுதியில் நோற்கிறார், அல்லது இறுதி பகுதியில் நோற்கிறார், அல்லது அந்த மாதத்தில் நோன்புகளை விட்டு விட்டு நோற்கிறார், அவருக்கு இந்த நன்மை கிடைக்குமா? கிடைக்காதா? என்றால், நிச்சயம் அவருக்கும் கிடைக்கும். இதில் மறுப்பேதுமில்லை. நபி(ஸல்)அவர்கள் ஷாவ்வால் மாத நோன்பை எப்படி வைத்தார்கள் என்பது பற்றி நேரடியான ஆதாரங்கள் இல்லாதபோதிலும். ஷாவ்வால் மாதத்திற்குள் இந்த ஆறு நோன்புகளும் நோற்கப்படவேண்டும், அதற்கான கால அவகாசம் ஷாவ்வால் மாதம் முடியும் வரை நீட்டப்பட்டிருக்கின்றது என்பதை பல ஆதாரங்களின் அடிப்படையில் நாம் புரிந்து கொள்கிறோம்.

அடுத்ததாக, ஹஜ்ஜுடைய கிரிகைகளில் **"தவாபுல் இஃபாலாஹ்"** என்று ஒரு அமல் இருக்கிறது, அது துல்ஹஜ் பிறை 10ல் செய்யவேண்டும். ஆனால், இதில் மாதவிடாய் ஏற்பட்டுவிட்ட பெண்களுக்கு அவர்கள் சுத்தமாகும்வரை கால அவகாசம் நீட்டப்பட்டிருக்கின்றது.

இது போன்று பல வணக்க வழிபாடுகளில் அவைகளைச் செய்யவேண்டிய நாள் அல்லது நேரம் என்பதாக ஒரு நாள் அல்லது நேரம் குறிக்கப்பட்டிருக்கும், அதே நேரத்தில் அதை நிறைவேறுவதற்கான கால அவகாசமும் நீட்டப்பட்டிருக்கும். இது அல்லாஹ்வின் புறத்திலிருந்து நமக்கு வழங்கப்பட்டிருக்கும் அருளாகும்.

அதைப் போன்றுதான் உள்ஹிய்யாவும், இதில் இப்ராஹீம்(அலை)அவர்களின் தியாகச் செயலை நினைவுகூறும் விதமாக உள்ஹிய்யா கொடுத்தல் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கான கால அவகாசம் அய்யாமுத் தஷ்ரீக் வரை நீட்டப்பட்டிருக்கின்றது அந்த கால அவகாசத்திற்குள் கொடுக்கவேண்டும் என்பதை பல ஆதாரங்களின் அடிப்படையில் நாம் விளங்கிச் செயல்படுகிறோம்.

ஒரு வரலாற்றுப் பின்னணியை வைத்து, அந்த நாளில் மட்டும்தான் அந்த செயலைச் செய்யவேண்டும் என்று குறிப்பிடுவதாக இருந்தால் அது சம்பந்தமான

நேரடியான ஆதாரங்கள் இல்லாமல் அனுமானங்களைக் கூறக்கூடாது. இப்ராஹீம்(அலை)அவர்கள் அறுத்த தினத்தில் அறுத்தால்தான் அது உள்ஹிய்யாவாக ஆகும் என்பது ஆதாரத்தின் அடிப்படையில் அமைந்த கருத்தல்ல, மாறாக இக்கருத்திலுள்ளவர்களின் அனுமானத்தின் அடிப்படையில் அமைந்ததாகும் என்பதை விளங்கிக்கொள்ள மேற்கண்ட விளக்கமே போதுமானதாகும். இவர்களின் அனுமானம் தவறானது என்பதற்கு மேலும் ஒரு சான்று,

أنس بن مالك – رضي الله عنه – قال : قال النبي – صلى الله عليه وسلم – : " من ذبح قبل الصلاة ، فإنما ذبح لنفسه ، ومن ذبح بعد الصلاة ، فقد تم نسكه وأصاب سنة المسلمين .

**எவர் பெருநாள் தொழுகைக்கு முன்னால் அறுத்துவிடுகிறாரோ, (அது உள்ஹிய்யா அல்ல) அது அவருக்காக அறுத்துக்கொண்டதாகும். எவர் பெருநாள் தொழுகைக்குப் பின்னால் அறுக்கிறாரோ, அவருடைய வழிபாடு பூரணமாகிவிட்டது, அவர் முஸ்லீம்களின் வழிமுறை அடைந்துகொண்டார் என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அனஸ் இப்னு மாலிக்(ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள்.** (நூல்: புஹாரி)

இந்த ஹதீஸின் நோக்கம் எந்த நேரத்தில் அறுத்தல் அது உள்ஹிய்யாவாக ஆகாது என்பதை விவரிப்பதாகும்.

இதில் ஈத் தொழுகைக்கு முன்னால் கொடுத்தால் அது உள்ஹிய்யாவாக ஆகாது என்று கூறிய நபி(ஸல்)அவர்கள். உள்ஹிய்யா என்பதை யௌமுன் நஹ்றில் மட்டும் தான் கொடுக்கவேண்டும் இல்லாவிட்டால் அது உள்ஹிய்யாவாக ஆகாது என்றிருந்தால் அதையும் சேர்த்து கூறியிருப்பார்களல்லவா? எனவே, அய்யாமுத் தஷ்ரீக்கில் உள்ஹிய்யா கொடுத்தால் அது உள்ஹிய்யாவாக ஆகாது என்பது இவர்களின் அனுமானமே தவிர, ஆதாரப்பூர்வமானதல்ல.

## இரண்டாவது காரணம்:

அய்யாமுத் தஷ்ரீக்கிலும் அறுக்கலாம் என்று பல ஹதீஸ்கள் வந்துள்ளன, அவை அனைத்தும் பலகீனமானதாகும் என்று கூறி, அவைகளைக் கொண்டு செயல்படக்கூடாது என்பது அவர்களின் இரண்டாவது காரணம்.

**அந்த அறிவிப்புகள் :**

> **அஹ்மத், பைஹகியில் இடம்பெற்றுள்ள ஜுபைர் இப்னு முத்தியிம்(ரலி)அவர்கள் அறிவிக்கும் ஹதீஸாகும். இந்த ஹதீஸின் அறிவிப்புத் தொடரில் ஸுலைமான் இப்னு மூஸா என்பவர் வருகிறார், இவர் அறிவிக்கும் ஸஹாபியை சந்தித்ததில்லை எனவே, இந்த அறிவிப்புத் தொடர் அறுந்த பலவீனமான ஹதீஸ் என்று இமாம் இப்னு ஹஜர் கூறுகிறார்கள்.**

தபரானியில் இடப்பெற்றுள்ள அறிவிப்புத் தொடரில் ஸுவைத் இப்னு அப்துல் அஸீஸ் என்பவர் வருகிறார், இவர் பலவீனமானவர் என்பது பல அறிஞர்களின் கருத்தாக இருப்பதால், இந்த அறிவிப்புத் தொடரும் ஆதாரப்பூர்வமானதல்ல.

இப்னு ஹிப்பான், இப்னு அதீ, பஸ்ஸார் ஆகிய நூற்களில் இடப்பெற்றுள்ள அறிவிப்புத் தொடரில் அப்துர்ரஹ்மான் இப்னு அபீ ஹுசைன் என்பவர் ஜுபைர் இப்னு முத்தியிம்(ரலி)அவர்களிடமிருந்து அறிவிப்பதாக வருகிறது, ஆனால், இவர் அந்த ஸஹாபியை சந்தித்ததில்லை என்று அறிஞர்கள் கூறுவதால், இந்த ஹதீஸும் தொடர் அறுந்த ஹதீஸாகும்.

தாரகுத்னியில் அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸில் அஹ்மத் இப்னு ஈஸா அல்கஷ்ஷாப் என்பவர் வருகிறார் இவர் ஹதீஸ்களை இட்டுக்கட்டுபவர் என்று பல அறிஞர்கள் கூறுவதால் இதையும் ஆதாரமாக கொள்ளமுடியாது.

பைஹகியில் வந்துள்ள மற்றொரு அறிவிப்பில் முஆவியா இப்னு யஹ்யா அஸ்ஸதபி என்பவர் வருகிறார், இவரும் பலவீனமானவர் என்று பல அறிஞர்கள் கூறியிருப்பதால், இந்த ஹதீஸையும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

எனவே, அய்யாமுத் தஷ்ரீக்கிலும் அறுத்துப் பலியிடலாம் என்று வருகின்ற அனைத்து அறிவிப்புகளும் பலவீனமானது என்பதால் அவைகளை ஏற்று செயல்படமுடியாது.

**காரணத்திற்காக பதில் :**

இத்தனை பலவீனமான ஹதீஸ்களை மேற்கோள்காட்டியவர்களுக்கு, ஒரு ஆதாரப்பூர்வமான ஹதீஸ் எப்படி விடுபட்டது என்பது தெரியவில்லை.

حدثنا هناد حدثنا وكيع عن موسى بن علي عن أبيه عن عقبة بن عامر قال قال رسول الله صلى الله عليه وسلم يوم عرفة ويوم النحر وأيام التشريق عيدنا أهل الإسلام وهي أيام أكل وشرب

அரபாவுடைய தினமும், நஹ்ருடைய (பெரு)நாளும், தஷ்ரீகுடைய நாட்களும் இஸ்லாமியர்களாகிய நம்மின் பெருநாட்களாகும், இன்னும் இந்த நாட்கள் உண்பதற்கும் பருகுவதற்குமான நாட்களாகும் என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதாக உக்பத் இப்னு ஆமிர்(ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நூல்: அபூதாவூத், திர்மிதி , இந்த ஹதீஸ் "ஹஸனுன் ஸஹீஹ்" என்ற தரத்திலுள்ளது என்பதாக இமாம் திர்மிதி (ரஹ்)அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்)

இந்த ஹதீஸில் ஐந்து தினங்களையும் பெருநாள் தினமாக நபி(ஸல்)அவர்கள் அறிவித்துள்ளார்கள். எனவே, அய்யாமுத் தஷ்ரீகும் பெருநாள் தினங்களாக இருப்பதால் அன்றைய தினங்களும் அறுத்துப் பலியிடலாம் என்பது தெளிவாகும். இதனடிப்படையில்தான் அறிஞர்கள் அய்யாமுத் தஷ்ரீக்கிலும் அறுத்துப் பலியிடலாம் என்ற கருத்தில் ஒன்றுபட்டிருக்கின்றனர்.

அரபா தினமும் பெருநாள் தினம் என்று நபி(ஸல்)அவர்கள் கூறியிருக்கின்றார்கள் என்றால், அன்று அறுத்துப் பலியிடலாமா? என்று எதிர் கேள்வி கேட்கலாம்.இப்போது நாம் மேற்கூறிய ஹதீஸை இத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டும். அதாவது,

أنس بن مالك – رضي الله عنه – قال : قال النبي – صلى الله عليه وسلم – : " من ذبح قبل الصلاة ، فإنما ذبح لنفسه ، ومن ذبح بعد الصلاة ، فقد تم نسكه وأصاب سنة المسلمين .

**எவர் பெருநாள் தொழுகைக்கு முன்னால் அறுத்துவிடுகிறாரோ, (அது உள்ஹிய்யா அல்ல) அது அவருக்காக அறுத்துக்கொண்டதாகும். எவர் பெருநாள் தொழுகைக்குப் பின்னால் அறுக்கிறாரோ, அவருடைய கடமை பூரணமாகிவிட்டது, அவர் முஸ்லீம்களின் வழிமுறை அடைந்துகொண்டார் என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அனஸ் இப்னு மாலிக்(ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள்.** (நூல்: புஹாரி)

அரபாவுடைய நாள் பெருநாள் தினமாக இருந்தாலும், பத்தாவது நாள் பெருநாள் தொழுகைக்குப் பின்னால்தான் அறுத்துப் பலியிடுவதை ஆரம்பிக்கவேண்டும் என்பதை இந்த ஹதீஸில் நபி(ஸல்)அவர்கள் விளக்கியிருப்பதால், அறுத்துப் பலியிட ஆரம்பிக்கவேண்டும் என்பது விளங்குகிறது. இவ்வாறு அறுத்துப் பலியிடுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட நேரம், அய்யாமுத் தஷ்ரீக் வரை நீட்டப்பட்டிருக்கின்றது என்பதை விளங்கிக் கொள்வதற்குத் தான், அய்யாமுத் தஷ்ரீக்கையும் பெருநாள் தினம் என்பதாக மேற்கண்ட ஹதீஸில் நபி(ஸல்)அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பது தெளிவாகும். அய்யாமுத் தஷ்ரீக்கிலும் உள்ஹிய்யா கொடுக்கலாம் என்பதற்கு இதைவிட தெளிவான சான்று தேவையில்லை.

**அய்யாமுத் தஷ்ரீகுடைய நாட்கள் அனைத்தும் உள்ஹிய்யா கொடுப்பதற்குரிய நாட்கள்தான் என்று வந்துள்ள ஹதீஸின் தரம் பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்.:**

عن جبير بن مطعم رضي الله عنه عن النبي – صلى الله عليه وسلم – أنه قال :( كل فجاج مكة منحر ، وكل أيام التشريق ذبح ) رواه أحمد وابن حبان وصححه ورواه البيهقي والطبراني في الكبير والبزار والدارقطني وغيرهم.

**மக்காவின் பகுதிகள் அனைத்தும் அறுப்பதற்குரிய இடமாகும். இன்னும், அய்யாமுத் தஷ்ரீகுடைய நாட்கள் அனைத்தும் அறுப்பதற்குரியதாகும் என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதாக ஜுபைர் இப்னு முத்யிம்(ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள்.** (நூல்: **அஹ்மத், இப்னு ஹிப்பான், பைஹகீ, தபரானி, பஸ்ஸார், தாரகுத்னி**)

**இந்த ஹதீஸை இமாம் இப்னு ஹிப்பான் அவர்கள் சரிகண்டுள்ளார்கள், அதாவது "ஸஹீஹ்" என்பதாக தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.**

அஷ்ஷைக் அல்பானி(ரஹ்)அவர்கள் தங்களுடைய "ஸில்ஸிலதுல் அஹாதீஸுஸ் ஸஹீஹா" என்ற நூலில் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களின் தொடர் பற்றிய விமர்சனங்களை பதிவு செய்துவிட்டு, இறுதியாக இந்த ஹதீஸின் தரம் பற்றி அவர்கள் குறிப்பிடும்போது கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார்கள்.

والصواب عندي أنه لا ينزل عن درجة الحسن بالشواهد التيْ قبله.

**இந்த ஹதீஸ் பற்றிய முன்னுள்ள சாட்சியங்களை வைத்துப் பார்க்கின்றபோது, இந்த ஹதீஸ் "ஹஸன்" என்ற தரத்திலிருந்து இறங்காது என்பதுதான் என்னிடம் சரியானதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.**

அஹ்மதில் இடம்பெற்றிருக்கும் இந்த ஹதீஸின் அறிவிப்புத் தொடரைப் பற்றி இமாம் ஷுஐப் அல் அர்னாவூத்(ரஹ்) **"இந்த ஹதீஸின் அறிவிப்புடத்தொடர் பலஹீனமாக இருந்தாலும், மற்ற தொடர்களைக் கொண்டு இதிலுள்ள செய்தி உறுதிப்படுவதால் இந்த ஹதீஸ் "ஸஹீஹுல் லி கைரிகி"** என்ற தரத்திலுள்ளதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாம் அஷ்ஷவ்கானி(ரஹ்)அவர்கள் தங்களுடைய "நைலுல் அவ்தாரில்" **"இதே கருத்துள்ள பல ஹதீஸ்கள் வந்துள்ளதால், ஒன்று மற்றொன்றை வலுப்படுத்துவதால், இது சம்பந்தமாக வந்துள்ள ஹதீஸ்கள் அனைத்தும் சரியானதாகும்"** என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இதே கருத்தை இமாம் இப்னுல் கைய்யூம்(ரஹ்)அவர்கள் தங்களுடைய "ஸாதுல் மஆத்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே, ஹதீஸ் துறையிலும், மார்க்கச் சட்டத் துறையிலும் சிறந்த பலநூற்றுக்கணக்கான அறிஞர்கள், மேற்கண்ட ஹதீஸை ஆய்வு செய்துதான், அதனுடைய தரத்தையும், அதனுடைய சட்டத்தையும் நமக்கு விளக்கியிருக்கின்றார்கள். அவர்களின் ஆய்விற்கு எதிரான எந்த தெளிவான சான்றுகளும் இல்லாத போது, இதை மறுப்பவர்களின் எந்த ஆதாரமுமற்ற அனுமானத்திற்காக அறிஞர்களின் ஆய்வையும், அந்த ஆய்வின் மூலம் கிடைத்த சட்டத்தையும் எவ்வாறு புறம்தள்ளமுடியும்?.

இன்னும் இதை உறுதிப்படுத்துவதற்காக, அய்யாமுத் தஷ்ரீக்கிலும் உள்ஹிய்யா கொடுக்கலாம் என்பது சம்பந்தமாக வந்துள்ள ஸஹாபாக்கள், மற்றும் அறிஞர்களின் கருத்துக்களையும் இனி காண்போம்.

**அலி(ரலி) அவர்கள்:**

روي عن علي بن أبي طالب . رضي الله عنه: أيام النحر: يوم الأضحى وثلاثة أيام بعده

**அறுத்துப் பலியிடுவதற்கான நாட்கள் "அல்ஹா"உடைய நாள்(பெருநாள்), இன்னும் அதற்கு அடுத்துள்ள மூன்று நாட்களாகும் என்று அலி(ரலி)அவர்கள் கூறியதாக மாலிக் (ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள் (நூல்: சுனனுல் குப்ரா லில் பைஹகீ)**

அலி(ரலி)அவர்களின் இந்த சொல், ஸாதுல் மஆத், அல்ஜாமிவுல் அஹ்காமுல் குர்ஆன், அல்முகன்னி, நைலுல் அவ்தார் போன்ற நூற்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்னும், இப்னு அப்பாஸ்(ரலி), இன்னும் இப்னு உமர்(ரலி) ஆகியோரும் இதே கருத்தில் உள்ளார்கள் என்பதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இப்னு அப்பாஸ்(ரலி):**

أخبرنا أبو حامد بن علي الحافظ ، أنبأ زاهر بن أحمد ، ثنا أبو بكر بن زياد النيسابوري ، ثنا محمد ابن يحيى ، ثنا ابو داود ، عن طلحة بن عمرو الحضرمي ، عن عطاء ، عن ابن عباس رضي الله عنهما قال : الْأَضْحَى ثلاَثَةُ اَيَّامٍ بعد يومٍ النَّحرِ .

**உள்ஹிய்யா கொடுத்தல் என்பது யௌமுன் நஹ்ருக்குப் பின்னால் மூன்றுநாட்களாகும் என்று இப்னு அப்பாஸ்(ரலி)அவர்கள் கூறியதாக அதாவு(ரஹ்)அவர்கள் கூறுகிறார்கள். (நூல்: சுனனுல் குப்ரா லில் பைஹகீ)**

இதே கருத்தை இன்னும் பல ஸஹாபாக்களும் கூறியிருப்பதாக இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இமாம் இப்னுல் கையிம்(ரஹ்)அவர்கள்:**

அய்யாமுத் தஷ்ரீக்கில் உள்ஹிய்யா கொடுப்பது கூடாது என்பவர்களைப் பார்த்து இமாம் இப்னுல் கையிம்(ரஹ்)அவர்கள் கீழ்க் காணுமாறு கேள்வி எழுப்புகிறார்கள்.

ولأن الثلاثة تختص بكونها أيام منى وأيام الرمي وأيام التشريق ويحرم صيامها فهي إخوة في هذه الأحكام فكيف تفترق في جواز الذبح بغير نص ولا إجماع

**பெருநாளைக்குப் பின்னால் உள்ள அந்த மூன்றுநாட்கள், "அய்யாமு மினா" மினாவில் தங்கியிருக்கும் நாட்கள், "அய்யாமுர்ரமி" கல்லெறியும் நாட்கள்,**

இன்னும் அய்யாமுத் தஷ்ரீக் என்ற இந்த நாட்களும் தனிச்சிறப்புப் பெற்றவையாகும். அந்த நாட்களில் நோன்பு நோற்பது ஹராமாக்கப்பட்டிருக்கின்றது, இந்த நாட்கள் பெருநாளிக்குரிய அனைத்துச் சட்டங்களிலும் கூட்டாகும்போது, எவ்விதமான தெளிவான ஆதாரங்களும், இஜ்மாவும் இல்லாமல் அறுப்பது கூடாது என்று அந்த சட்டத்தில் மட்டும் இந்நாட்களை எவ்வாறு பிரிக்கமுடியும்? என்று இமாம் இப்னுல் கையூமுல் ஜவ்ஸி(ரஹ்)அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். (நூல்: ஸாதுல்மஆத்)

அஷ்ஷைக் இப்னு உதைமீன்:

قال الشيخ ابن عثيمين في "أحكام الأضحية" عن وقت ذبح الأضحية " : من بعد صلاة العيد يوم النحر إلى غروب الشمس من آخر يوم من أيام التشريق وهو اليوم الثالث عشر من ذي الحجة ، فتكون أيام الذبح أربعة : يوم العيد بعد الصلاة ، وثلاثة أيام بعده ، فمن ذبح قبل فراغ صلاة العيد ، أو بعد غروب الشمس يوم الثالث عشر لم تصح أضحيته . لكن لو حصل له عذر بالتأخير عن أيام التشريق مثل أن تهرب الأضحية بغير تفريط منه فلم يجدها إلا بعد فوات الوقت ، أو يوكل من يذبحها فينسى الوكيل حتى يخرج الوقت ، فلا بأس أن تذبح بعد خروج الوقت للعذر ، وقياساً على من نام عن صلاة أو نسيها فإنه يصليها إذا استيقظ أو ذكرها.

அஷ்ஷைக் இப்னு உதைமீன்(ரஹ்)அவர்கள் உள்ஹிய்யாவை அறுக்கும் நேரம் சம்பந்தமாக தங்களுடைய "அஹ்காமுல் உள்ஹிய்யா" என்ற நூலில் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

(உள்ஹிய்யாவை அறுக்கும் நேரம்) யௌமுன் நஹ்ருடைய நாளில் பெருநாள் தொழுகைக்குப் பின்னாலிருந்து அய்யாமுத் தஷ்ரீகுடைய கடைசி நாளில் அதாவது துல்ஹஜ் பிறை பதிமூன்றாம்நாள் சூரியன் மறையும் வரையாகும். எனவே, அறுப்பதற்குரிய நாட்கள் நான்காகும். அதாவது, பெருநாளில் தொழுகைக்குப் பின்னால், இன்னும் அதைத் தொடர்ந்துள்ள மூன்றுநாட்களாகும். எவர் பெருநாள் தொழுகையை முடிப்பதற்கு முன்பு அல்லது பதிமூன்றாம் நாள் சூரியன் மறைவிற்குப் பின்னால் அறுக்கின்றாரோ அது கூடாது.

அதே நேரத்தில், பிந்துவதற்கான காரணம் சரியாக இருந்தால்,அதாவது உள்ஹிய்யாவிற்காக வைத்திருந்த பிராணி வெருண்டோடிவிட்டது, அது அறுப்பதற்கான நேரம் தவறிய பின்புதான் கிடைத்தது, அல்லது உள்ஹிய்யா கொடுப்பதற்காக ஒருவரை நியமனம் செய்திருந்தார், அறுப்பதற்குரிய நேரம் முடியும் வரை அவர் மறந்துவிட்டார் என்றால், இது போன்ற நேரங்களில் நேரம் முடிந்தபின்பும் அறுப்பது கூடும். இது ஒருவர் தொழாமல் தூங்கிவிட்டால், அல்லது தொழுகையை மறந்துவிட்டால் எப்போது அவர்

**விழிக்கின்றாரோ, அல்லது அவருக்கு நினைவிற்கு வருகிறதோ அப்போது தொழுது கொள்ளலாம் என்ற ஹதீஸின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாகும்" என்று ஷைக் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.**

**பல அறிஞர்களின் கருத்து:**

وأما آخر وقت ذبح الأضحية فهو غروب شمس اليوم الثالث من أيام التشريق ، أي أن أيام النحر أربعة ؛ يوم العيد وثلاثة أيام بعده، وهذا أرجح أقوال العلماء في المسألة وهو قول الشافعية ونقل هذا القول عن عمر بن عبد العزيز وسليمان بن موسى الأسدي فقيه أهل الشام ، وهو قول عطاء والحسن والأوزاعي ومكحول واختاره شيخ الإسلام ابن تيمية وابن القيم والشوكاني.انظر المغني 453/9 ، المجموع 390/8 ، زاد المعاد 318/2 ، نيل الأوطار 142/5.

**உள்ஹிய்யா கொடுப்பதின் கடைசி நேரம் அய்யாமுத் தஷ்ரீக்கின் மூன்றாவது நாளின் சூரியன் மறையும் நேரமாகும். அதாவது, ஈதுடைய நாளும்,இன்னும் அதற்கடுத்துள்ள மூன்று நாட்களுமாகும். இதுதான் அதிகமான அறிஞர்களிடம் தேர்ந்தெடுக்கப்பட்ட சொல்லாகும். இச்சொல் இமாம் ஷாபிஈ(ரஹ்)அவர்களின் சொல்லாகும். இச்சொல்லை உமர் இப்னு அப்துல் அஸீஸ், சிரியா தேசத்தின் அறிஞரான இமாம் ஸுலைமான் இப்னு மூஸா அல்அஸதி (ரஹீமஹுமுல்லாஹ்) ஆகியோரின் சொல்லாகும். இன்னும் இமாம் அதாவு இப்னு அபீரபாஹ் , இமாம் ஹஸனுல் பஸரி, இமாம் அவ்சாயி, இமாம் மக்ஹூல் (ரஹீமஹுமுல்லாஹ்) ஆகியோரின் சொல்லும் இதுதான். இச்சொல்லை இமாம் ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா, இமாம் இப்னுல் கைய்யூம் இமாம் அஷ்ஷவ்காணி(ரஹீமஹுமுல்லாஹ்) ஆகியோரும் இக்கருத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். (நூல்:அல்முகன்னி, அல்மஜ்மூவு, ஸாதுல் மஆத், நைலுல் அவ்தார்)**

அஷ்ஷைக் ஸாலிஹ் முநஜ்ஜித் அவர்கள் தங்களுடைய இது சம்பந்தாமான பதாவாவில் அய்யாமுத் தஷ்ரீக்கிலும் உள்ஹிய்யா கொடுப்பது கூடும் என்பதை பல ஆதாரங்களைக் கொண்டு விளக்கியிருக்கின்றார்கள். **(பார்க்க:பதாவா எண்: 36651)**

சவுதி அரேபியாவிலுள்ள மூத்த அறிஞர்களின் பத்வா குழுமமாகிய **"லஜ்னத்துத் தாயிமா லில்பதாவா"** வின் மூலம் வெளியிடப்பட்டிருக்கும் பத்வாவிலும் அய்யாமுத் தஷ்ரீக்கில் உள்ஹிய்யா கொடுப்பது கூடும் என்பது தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றது. **(பார்க்க:பதாவா எண் : 11/406)**

**மேற்கண்ட ஆதாரங்கள் அனைத்தும் அய்யாமுத் தஷ்ரீக்கிலும் உள்ஹிய்யா கொடுக்கலாம் என்பதை தெளிவுபடுத்துகின்றன. அதன்படியே ஸஹாபாக்களின் சொல் மற்றும் செயலும், அதைடத்தொடர்ந்து இமாம்களின்**

கருத்தும் நடவடிக்கையும் அந்த ஆதாரங்களை உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. இன்னும், முற்கால மற்றும் தற்கால அறிஞர்கள் வரை அதை உறுதிப்படுத்தியே பதாவாக்கள் வழங்கியிருப்பதால். அதன்படியே ஒட்டுமொத்த முஸ்லிம் உம்மாவின் செய்லபாடும் அமைந்திருக்கின்றது. எனவே, அய்யாமுத் தஷ்ரீக்கில் உள்ஹிய்யா கொடுப்பது கூடாது என்ற அனுமானத்தை தூக்கியெறிந்துவிட்டு, கூடும் என்ற ஆதாரத்தின் அடிப்படையில் செயல்படுவதுதான் மார்க்கமாகும்.

## அல்லாஹ்வே மிக அறிந்தவன்!.


இப்படிக்கு,

தொகுப்பு மற்றும் மொழியாக்கம்

**K .K . பிஸ்மில்லாஹ் கான் பைஜி**

சாப்டூர், அலைபேசி : 8973307691